செ.வெ.எண். 396/2017 நாள்: 11.08.2017

**பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினையொட்டி மாவட்ட அளவிலான மாணவ-மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைக்கிறார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா வரும் 30.08.2015 அன்று வண்டலூர், கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலைய முனையத்தில் பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. அதனையொட்டி மாவட்டம் முழுவதும் கலை-இலக்கிய போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், கலாச்சார நிகழ்வுகள், பட்டிமன்றம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. அதன்படி மாவட்ட விளையாட்டுத்துறை மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவியர்களுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது.

மாவட்டத்தில் உள்ள மாணவ-மாணவிகளை ஒருங்கிணைத்து, மாவட்ட விளையாட்டு அரங்கில் நாளை (12.08.2017) காலை 10.00 மணியளவில் நடத்தப்படும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தடகளம், கூடைப்பந்து, கைப்பந்து (Handball), கபடி, கையுந்துபந்து (Volleyball) மற்றும் நீச்சல் போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்நிகழ்வில் பள்ளி மாணவ-மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

செய்தி வெளியிடுபவர்

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**